Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

MONDAY, DECEMBER 2, 2024

திங்கட்கிழமை டிசெம்பர் 02, 2024 | ஒளி: 10 கதிர்: 105 | பக்கம்: 07 | நகரப்பதிப்பு | FREE



## வெங்காய வரி குறைப்பு

இறக்குமதி செய்யப்படும் வெங்காயத்திற்கான 30 ரூபாய் வரியை, 20 ரூபாவாக குறைக்க நிதியமைச்சு தீர்மானித்துள்ளது.

இது இம்மாதம் 31ஆம் திகதி வரையிலும் அமுலில் இருக்கும். இதேவேளை, ஒரு கிலோ கிராம் உருளைக்கிழங்குக்கான 60 ரூபாய் விசேட வர்த்தக வரியும் இம்மாதம் 31ஆம் திகதி வரை அமுலில் இருக்கும்.



# காற்றின் தரத்தில் பாதிப்பு

நிலவும் சீரற்ற வானிலையால் நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் காற்றின் தரம் பாதிப்பை ஏற்படுத்தும் அளவுக்கு உயர்வடையும் சாத்தியம் காணப்படுவதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணம், கொழும்பு ஆகிய நகரங்களில் காற்றின் தரம் வீழ்ச்சியடைந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. நுவரெலியா, பதுளை ஆகிய மாவட்டங்களில் காற்றின் தரம் மத்திய தரத்தில் காணப்படுகின்றது.

தொடர்ச்சி P2

## எகிறியது மரக்கறிகளின் விலை



நாட்டின் பல பகுதிகளில் பெய்த கடும் மழை காரணமாக மரக்கறிகளின் விலை திடீரென அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தொடர்ச்சி P2

## "வதந்திகளை நம்ப வேண்டாம்"



வ.சக்தி

சுனாமி வரப்போவதாகக் கூறப்படும் வதந்திகளை நம்ப வேண்டாம் என மட்டக்களப்பு மாவட்ட அனர்த்த முகாமைத்துவம் தெரிவித்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் சனிக்கிழமை(30) இரவு கடல் வற்றியுள்ளதாகவும், சுனாமி தாக்கம்

தொடர்ச்சி P2

### வே.பிரபாகரனின்

## பிறந்த நாளை கொண்டாடிய ஆறு பேரிடம் விசாரணை

எம்.றொசாந்த்



தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் பிறந்த நாள் கொண்டாடப்பட்ட சம்பவம் தொடர்பில்

தொடர்ச்சி P2

## ‘உரிமைப் பாதையில் செல்’...






சர்வதேச எய்ட்ஸ் தினமான டிசெம்பர் முதலாம் திகதியன்று, காலிமுகத்திடலில், ‘உரிமைப் பாதையில் செல்’ எனும் தொனிப்பொருளில், பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய, ஊடகத்துறை மற்றும் சுகாதார அமைச்சர் டாக்டர் நலிந்த ஜயதிஸ்ஸ, ஆகியோரின் தலைமையில், விசேட விழிப்புணர்வு செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டது.



## சேதமடைந்த வயல் நிலங்கள் தொடர்பான மதிப்பீட்டு ஆரம்பம்

வெள்ளத்தால் சேதமடைந்த வயல் நிலங்கள் தொடர்பான மதிப்பீட்டு நடவடிக்கைகளுக்காக விசேட குழு நியமிக்கப்பட்டுள்ளதாக விவசாய மற்றும் கமநல காப்புறுதி சபை தெரிவித்துள்ளது.

சுமார் 25 மாவட்டங்களையும் உள்ளடக்கி இந்த குழு நியமிக்கப்பட்டுள்ளதாகவும் சபை கூறியுள்ளது.

வெள்ள நீர் வடிந்த பின்னர் பயிர்ச் சேதங்கள் தொடர்பான மதிப்பீடுகளை திங்கட்கிழமை(02) ஆரம்பிக்கவுள்ளதாக சபையின் தலைவர் பிரேமசிறி ஜாசிங்கஆரச்சி குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

### சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதே

## பாதாளத்தில் இருந்து மீள சிறந்த வழி



சுற்றுலாத் துறையானது நமது நாட்டின் அபிவிருத்திக்கு வேகமாக முன்னேறக்கூடியதொரு பிரதானமானதொரு துறையாகும். இந்தத் துறையில் பல சவால்கள் காணப்படுகின்றன. நமது நாடு குறிப்பாக மாநாட்டு நடவடிக்கைகள் சார் பல்வேறு வாய்ப்புகளை ஊக்குவிக்கும் மையமாக முன்னேற வேண்டும்.

தொடர்ச்சி P2

### மாவீரர் நினைவேந்தல்:

## குந்தகம் விளைவித்த மூவர் அதிரடியாக கைது

தமிழீழ விடுதலைப் புலிகளின் மாவீரர் நினைவேந்தல் நிகழ்வுகளை முன்னெடுத்துச் சென்று பொது அமைதிக்கு குந்தகம் விளைவித்த குற்றப் புலனாய்வுத் திணைக்களம் (சி.ஐ.டி.) மற்றும் பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவினர் (டிஐடி) மூன்று நபர்களை கைது செய்துள்ளனர்.

தொடர்ச்சி P2

## பயங்கரவாத குழுவுக்கு நிதி திரட்டியவர் கைது

பிரித்தானியவில் இருந்து பயங்கரவாத குழுவொன்றுக்கு நிதி திரட்டிய நபர் ஒருவர் இலங்கைக்கு வந்தபோது, கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது சனிக்கிழமை (30) செய்யப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

## எரிபொருட்களின் விலையில் மாற்றம்



மாதாந்த எரிபொருள் விலை திருத்தத்தின் பிரகாரம், எரிபொருளின் விலையில் சனிக்கிழமை (30) முதல் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

அதற்கமைய, 311 ரூபாயாக இருந்த ஒக்டேன் 92 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 02 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 309 ரூபாவாகும்.

283 ரூபாவாக இருந்த ஒட்டோ டீசல் லீற்றரின் விலை 03 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 286 ரூபாவாகும்.

மேலும், மண்ணெண்ணெய் 05 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டு 188 ரூபாவாக விற்பனை செய்யப்படுகின்றது.

இதேவேளை, ஒக்டேன் 95 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலையிலும், சுப்பர் டீசலின் விலையிலும் எவ்விதமான மாற்றம் மேற்கொள்ளப்படவில்லை என இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

PAGE 1 தொடர்ச்சிகள்



# காற்றின் தரத்தில் பாதிப்பு

சாதாரணமாக காற்றின் தரம் 50 புள்ளிகளுக்கு குறைவாகக் காணப்பட வேண்டுமென தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் தெரிவித்துள்ளது.

எனினும், யாழ். மாவட்டத்தில் காற்றின் தரம் 130 புள்ளிகளாகவும் கொழும்பு நகரில் காற்றின் தரம் 120 புள்ளிகளாகவும் பதிவாகியுள்ளது.

இந்த நிலைமையின் காரணமாக சுவாசக் கோளாறுகள் காணப்படுமாயின் உடனடியாக மருத்துவ ஆலோசனையைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென மத்திய சுற்றாடல் அதிகார சபையின் ஊடகப் பேச்சாளர் கலாநிதி அஜித் குணவர்தன மக்களுக்கு அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

## எகிறியது மரக்கறிகளின் விலை

இந்நிலையில், நுவரெலியா மத்திய சந்தையிலும் வீதியோர மரக்கறி விற்பனை நிலையங்களிலும் ஒரு கிலோ கிராம் போஞ்சியின் மொத்த விற்பனை விலை 650 முதல் 750 ரூபா வரையிலும், ஒரு கிலோ கிராம் பச்சை மிளகாயின் விற்பனை விலை 1,200 முதல் 1,300 ரூபா வரையிலும் உயர்ந்துள்ளது.

ஏனைய மரக்கறி வகைகளின் விலையும் நாளுக்கு நாள் அதிகரித்து காணப்படுவதால் வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் பாரிய சிக்கல்களை எதிர்நோக்கி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

நுவரெலியா மத்திய சந்தைக்கு வரும் அதிகமானவர்கள் மரக்கறிகளின் விலை அதிகரிப்பு காரணமாக நுகர்வோர் மரக்கறிகளை கொள்வனவு செய்வதை தவிர்த்து வருகின்றனர்

அத்துடன், நுகர்வோர் எண்ணிக்கையும் வெகுவாக குறைந்துள்ளதாகவும் இதனால் வியாபாரம் செய்யும் வியாபாரிகள் வியாபாரம் இன்றியும் அதிலும் பல மரக்கறிகள் இரண்டு மூன்று நாட்களின் பின் பழுதடைந்து கழிவுகள் ஏற்படுவதாகவும் இதனால் பாரிய நட்டம் ஏற்படுவதாகவும் மரக்கறி வியாபாரிகள் பழுதடையும் பெருமளவிலான மரக்கறிகளை தினமும் குப்பையில் போட வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

## “வதந்திகளை நம்ப வேண்டாம்”

ஏற்படப்போவதாகவும் தெரிவித்து, பெரும் பீதி ஏற்பட்டு பெரும்பாலான கிராம மக்கள் வீதிக்கு வந்துள்ளனர். அத்துடன், கடற்கரையை அண்டியுள்ள மக்களில் சிலர் இடம் பெயர்ந்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பில் மட்டக்களப்பு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளரைத் தொடர்பு கொண்ட வினவியபோது,

‘சுனாமி அனர்த்தம் தொடர்பில் பரப்பப்படும் வதந்திகளை நம்ப வேண்டாம்.

மேலும் சுனாமி அனர்த்தம் ஒன்று உருவாகும் பட்சத்தில், மக்களுக்கு அது தொடர்பில் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் ஊடாக உடனடியாக அறிவிக்கப்படும் என்பதனை மிகவும் பொறுப்புடன் அறியத்தருகின்றோம்” எனவும் தெரிவித்துள்ளார்.

## சேதமடைந்த வயல் நிலங்கள் தொடர்பான மதிப்பீட்டு ஆரம்பம்

அதிகளவிலான பயிர்ச் சேதம் அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் பதிவாகியுள்ளதாக அவர் குறிப்பிட்டார். நாடளாவிய ரீதியில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் விவசாய நிலங்கள் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை, வெள்ளத்தால் அழிவடைந்த நெல், சோளம், உருளைக்கிழங்கு, பெரிய வெங்காயம், மிளகாய், சோயா செய்கைகளுக்கு ஒரு ஏக்கருக்கு 40,000 ரூபாவிற்கு உட்பட்டு நட்டஈடு வழங்கப்படும் என விவசாய மற்றும் கமநல காப்புறுதி சபை தெரிவித்துள்ளது.

இதற்காக அரசாங்கத்தால் 1,000 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக சபை குறிப்பிட்டுள்ளது. பலத்த மழையுடனான வானிலை காரணமாக 390,000 ஏக்கர் வரையான வயல் நிலங்கள் நீரில் மூழ்கியுள்ளன.

## குந்தகம் விளைவித்த மூவர் அதிரடியாக கைது

கைதானவர்கள் மருதானை, சுன்னாகம் மற்றும் பத்தேகம பிரதேசங்களைச் சேர்ந்த 28, 35 மற்றும் 45 வயதுடைய நபர்கள் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் புகைப்படங்கள் மற்றும் காணொளிகளை சமூக ஊடகங்கள் ஊடாக பரப்பியதாக அவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

பழைய காட்சிகளுடன் முந்தைய எல்.ர.ரீ.ஈ. மாவீரர் நினைவேந்தல்களின் காணொளிகள் இந்த ஆண்டு கொண்டாட்டங்களாக அவர்கள் தரவேற்றியுள்ளனர்.

வன்முறையைத் தூண்டியமை மற்றும் தடைசெய்யப்பட்ட அமைப்பின் செயற்பாடுகளை ஊக்குவிக்கும் வகையில், பொய்யான விளம்பரங்கள் மற்றும் காணொளிகளைப் பரப்பிய குற்றச்சாட்டின் பேரில், குற்றவியல் சட்டம் மற்றும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் (PTA) ஆகியவற்றின் கீழ் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சி.ஐ.டி. மற்றும் டி.ஐ.டியினர் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## பிறந்த நாளை கொண்டாடிய ஆறு பேரிடம் விசாரணை

வல்வெட்டித்துறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் பிறந்த நாளான கடந்த 26ஆம் திகதி வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.கே சிவாஜிலிங்கத்தின் ஏற்பாட்டில், புலிகளின் தலைவரின் பூர்வீக வீடு அமைந்திருந்த காணியில் கேக் வெட்டி, மர நடுகை முன்னெடுக்கப்பட்டு கொண்டாடப்பட்டுள்ளது.

இதன்போது, நிகழ்விடத்தில், புலிகளின் தலைவரின் புகைப்படத்துடனான பதாகை ஒன்றும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது.

அவ்வேளை, அங்கு வருகை தந்திருந்த வல்வெட்டித்துறை பொலிஸார், புலிகளின் தலைவரின் படத்தை அகற்றி, நிகழ்வை நடத்த அறிவுறுத்தியுள்ளனர். இதனையுடுத்து, ஏற்பாட்டாளர்கள் புலிகளின் தலைவரின் படத்தை மறைத்து விட்டு நிகழ்வை முன்னெடுத்துள்ளனர்.

இந்நிலையில் பிறந்தநாள் நிகழ்வு தொடர்பில் வல்வெட்டித்துறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

நிகழ்வின் ஏற்பாட்டாளர் சிவாஜிலிங்கத்தை வாக்கு மூலம் வழங்க பொலிஸ் நிலையம் அழைத்த போது, சுகவீனம் காரணமாக வருகை தர முடியாது என பொலிஸாருக்கு தெரியப்படுத்தியதை அடுத்து, பொலிஸார் சிவாஜிலிங்கத்தின் வீட்டிற்குச் சென்று வாக்கு மூலம் பெற்றுள்ளனர்.

அதேவேளை, பிறந்த நாள் நிகழ்வில் கலந்து கொண்ட ஆறு பேரிடம் பொலிஸார் இதுவரையில் வாக்கு மூலங்களை பெற்றுள்ளதாகவும், பெறப்பட்ட வாக்கு மூலங்களின் அடிப்படையில் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் வழக்கு தொடர நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## பாதாளத்தில் இருந்து மீள சிறந்த வழி

இதற்குத் தேவையான பக்க பலத்தை பெற்றுக் கொடுக்க வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

அதிகளவு ஹோட்டல்கள் தேவைப்படுவதால், அரச தலையீட்டில் இதற்கான அதிகபட்ச தலையீட்டைப் பெற்றுக் கொடுப்பதன் மூலம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவித்து நாம் முன்னோக்கிச் செல்ல முடியும் என்றார்.

நாட்டின் சுற்றுலாத்துறையை மேலும் மேம்படுத்தும் நோக்கில் பிரபல மாணிக்கக்கல் வியாபாரியான வினில் வல்கம்பொலவினால் கொழும்பில் சனிக்கிழமை(30) ஆரம்பிக்கப்பட்ட புதிய ஹோட்டல் திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் கூறியுள்ளதாவது,

சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் துறைகளில் உயர் மட்ட சிறந்த சேவையை வழங்க, நன்கு பயிற்சி பெற்ற மற்றும் தேறிய திறன்களை தன்னகத்தே கொண்ட ஊழியர்களை நாம் உருவாக்க வேண்டும். நாடு எதிர்கொண்டுள்ள முப்பெரும் இடர்களால், நமது நாட்டின் தொழிலாளர் வளம் வெளிநாடுகளுக்கு நகரும் மூளைசாலிகள் வெளியேற்றம் நடந்து வருகிறது. இந்த மூளைசாலிகள் வெளியேற்றத்தை தற்காலிகமாகவேனும் குறைத்து, உழைப்புக்கு ஏற்ற ஊதியத்தை வழங்குவதன் மூலம் திறன்களும் ஆற்றலும் கொண்ட தொழிலாளர் வளத்தை நமது நாட்டில் பேணி வருவதற்கு நாம் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஹோட்டல் துறையை வலுப்படுத்த, 9 மாகாணங்களிலும் நவீன வசதிகளுடன் கூடிய சர்வதேச தரம் வாய்ந்த ஹோட்டல் பயிற்சி கல்லூரிகள் நிறுவப்பட வேண்டும்.

மேலும், சுற்றுலாத்துறையின் உட்கட்டமைப்பு மற்றும் மனித வளங்களை வலுப்படுத்துவதற்கான தொடர்ச்சியான வேலைத்திட்டமொன்று முன்னெடுக்கப்பட வேண்டும். வேறுபாடுகளை களைந்து, இனம், மதம், சாதி, வர்க்கம், கட்சி பாராது, ஒற்றுமையே நாட்டின் பலமாக கருதி, நாடு விழுந்துள்ள பாதாளத்தில் இருந்து மீண்டு வர நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன் என்றும் தெரிவித்தார்.

## பயங்கரவாத குழுவுக்கு நிதி திரட்டியவர் கைது

கொழும்பு நீதிவான் நீதிமன்றில் கொழும்பு வடக்கு குற்றப்பிரிவு பெற்ற பயணத்தடை உத்தரவின் அடிப்படையில், சந்தேகநபர் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த போது, குடிவரவு மற்றும் சுங்க அமுலாக்க பிரிவினர் அவரை பொறுப்பேற்று விமான நிலைய பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர்.

குறித்த சந்தேக நபரால் சேகரிக்கப்பட்ட பணம், கொழும்பு மற்றும் வன்னி பிரதேசத்தில் விநியோகிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் 2009ஆம் ஆண்டு நாட்டை விட்டு பிரித்தானிய குடியுரிமை பெற்ற கிளிநொச்சி பகுதியை சேர்ந்த 43 வயதுடையவர் ஆவார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை விமான நிலைய பொலிஸார் மற்றும் கொழும்பு வடக்கு குற்றத்தடுப்பு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

## தங்கத்தை கொடுத்த தங்க சாரதிகள்

செ.தி.பெருமாள்



வீதியில் கிடந்த பெறுமதி மிக்க தங்க சங்கிலியை ஹட்டன் நகரில் இயங்கும் முச்சக்கர வண்டி சங்க உறுப்பினர்கள் சனிக்கிழமை (30) உரியவரிடம் ஒப்படைத்து நேர்மையை நிருபித்துள்ளனர்.

பதுளை சென்று திரும்பிய சாமிமலை சின்ன சோலங்கந்தையைச் சேர்ந்த முத்துகிருஷ்ணன் புவனேஸ்வரன் தம்பதியர் தமக்கு உரித்தான இரண்டு பவுன் எடையுள்ள தங்க சங்கிலியை ஹட்டன் பேருந்து தரிப்பிடத்தில் இறங்கி சென்ற வேளையில் தவற விட்டு உள்ளனர்.

அதனைத் கண்டெடுத்த டிக்கோயா பகுதியில் உள்ள ராமநாதன் குகேந்திரன், தம்பிராஜ் சின்ன தம்பி ஆகிய இரண்டு முச்சக்கர வண்டி சாரதிகள் உரியவரிடம் கையளித்துள்ளனர்.

இவர்களது நேர்மையை பாராட்டி பணம் வழங்க முற்பட்ட போது அவர்கள் பணம் வாங்க மறுத்து விட்டனர். தவிர விட்ட தம்பதியர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து பாராட்டி சென்றமை குறிப்பிடத்தக்கது.

## மின்சாரம் தாக்கி முதியவர் பலி

செ.திவாகரன், டி.சந்ரு

கொத்மலை - வெதமுல்ல தோட்டத்தில் சனிக்கிழமை(30) இரவு மின்சாரம் தாக்கி அதே தோட்டத்தைச் சேர்ந்த தங்கவேல் கிருஷ்ணராஜ் (வயது 67) மரணமடைந்துள்ளார்.

காட்டு விலங்குகளிடமிருந்து மரக்கறி தோட்டத்தைப் பாதுகாப்பதற்காகப் பாதுகாப்பு வேலியில் இணைக்கப்பட்ட மின்சார இணைப்பில் இருந்து மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் அதேதோட்டத்தில் குரங்கு விரட்டும் தொழிலில் ஈடுபட்டு வந்தவர் எனவும் வழக்கம் போல் விவசாய காணிக்குத் தொழிலுக்குச் செல்லும்போது வழுக்கி மின்சார வேலியில் விழுந்து உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொத்மலை பொலிஸாருடன் நுவரெலியா தடயவியல் பொலிஸார் இணைந்து முன்னெடுத்துள்ளனர்.







# விழிப்புணர்வு நிகழ்வுகள்...

வ.சக்தி

சர்வதேச எய்ட்ஸ் தினமான, டிசெம்பர் 1ஆம் திகதியன்று சுகாதார அமைச்சினால் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்வுகள் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஞாயிற்றுக்கிழமை (01) முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இதன் பிரதான நிகழ்வு மாவட்ட பிராந்திய சுகாதார சேவை திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டு, அதன் முதலாவது விழிப்புணர்வு நிகழ்வாக மட்டக்களப்பு காந்தி பூங்காவில் இருந்து எய்ட்ஸ் தின விழிப்புணர்வு பேரணி நகரின் பிரதான வீதிகளூடாக சென்று மாவட்ட பிராந்திய சுகாதார சேவை திணைக்க ளத்தைசென்றடைந்து பின்னர் அங்கு,விழிப்புணர்வு நிகழ்வுகளும் முன்னெடுக்கப்பட்டன.

'உரிமைப் பாதையில் செல்' என்பது இவ்வாண்டின் கரு ப்பொருளாகும். சமூகத்தில் இந்த பாலியல் நோயின்



ஆபத்து சம்பந்தமான பதாகைகளை ஏந்தியவாறு விழிப்புணர்வு பேரணி முன்னெடுக்கப்பட்டது.

மாவட்ட பிராந்திய சுகாதார திணைக்களத்தின் பணிப்பாளர் வைத்தியர் ஆர்.முரளீஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்விற்கு மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள வைத்தியர்கள் பொதுச் சுகாதார பரிசோதகர்கள், அரச திணைக்களங்களின் உயர் அதிகாரிகள், சிவில் சமூக பிரதிநிதிகள், பொதுமக்கள், என பலரும் இதன்போது கலந்து கொண்டிருந்தனர்.





# "புதிய மாற்றத்துக்கு விட்டுக்கொடுக்க தயார்"

எஸ்.கணேசன்

நாட்டில் நடைபெற்று முடிவடைந்த பாராளுமன்ற தேர்தலின் பின்பு, மலையகத்தின் பல கட்சிகளிலும் பல மாற்றங்கள் ஏற்படுவதற்கான சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது. இது தொடர்பாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், தொழிலாளர் தேசிய சங்கம் என்பன வெளிப்படையாக அறிவித்துள்ள நிலையில், மலையக மக்கள் முன்னணியின் முக்கியஸ்தர்களின் கலந்துரையாடல் கூட்டம் தலவாக்கலையில் அண்மையில் நடைபெற்றுள்ளது.

இந்த கூட்டத்தில் மலையக மக்கள் முன்னணியின் எதிர்கால நடவடிக்கைகள் எதிர்வரும் வருடங்களில் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள், மாகாண சபை தேர்தல் ஆகியவற்றை எவ்வாறு எதிர்கொள்வது என்பது தொடர்பாக இந்த விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதன்போது கலந்து கொண்ட முக்கியஸ்தர்கள், எதிர்வரும் தேர்தல்கள் அனைத்திலும் மலையக



மக்கள் முன்னணி தனித்துப் போட்டியிட வேண்டும் என்ற கருத்தை முன்வைத்துள்ளனர். இதற்கு கூட்டத்தில் கலந்து கொண்ட பலரும் ஆதரவாகக் கருத்து வெளியிட்டுள்ளனர். இது தொடர்பாக இறுதி தீர்மானம் ஒன்றை எடுப்பதற்காக ஐவர் அடங்கிய குழு ஒன்று நியமிக்கப்பட்டதாக முன்னணியின் பெயர் குறிப்பிட விரும்பாத முக்கியஸ்தர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அதேநேரத்தில், மலையக தொழிலாளர் முன்னணியின் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பாகவும் புதியவர்களை இணைத்துக் கொள்வது தொடர்பாகவும் விரிவாகப் பேசப்பட்ட நிலையில், இது தொடர்பில் ஒரு வாரத்தில் தனக்கு அறிக்கை ஒன்றைப் பெற்றுத்தருமாறு நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் தலைவருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.

மலையக மக்கள் முன்னணியின் தலைமைத்துவத்திலும் செயலாளர் பதவியிலும் மாற்றங்களை மேற்கொள்வதற்கும் இதன்போது கலந்துரையாடப்பட்டது. இந்த மாற்றங்கள் தொடர்பாக இரண்டு வாரங்களில் தேசிய சபையில் தீர்மானம் எடுக்கப்படவுள்ளதாகவும் முன்னணியின் முக்கியஸ்தர் கூறியுள்ளார்.

இதேவேளை, எதிர்கால செயற்பாடுகளில் மலையக மக்கள் முன்னணி புதிய மாற்றத்திற்கு ஏற்றவகையில் மாற்றியமைக்கப்படுவதுள்ளதாகவும் அதற்கான எந்த விட்டுக் கொடுப்பையும் தான் செய்வதற்குத் தயாராக இருப்பதாகவும் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் இங்கு குறிப்பிட்டுள்ளார்.

மேலும், இலங்கையின் அனைத்து பாகங்களிலும் மலையக மக்கள் முன்னணியை விஸ்தரிப்பது தொடர்பாகவும் இது தொடர்பாக பல மாவட்டங்களிலிருந்து தன்னிடம் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் எதிர்வரும் வாரத்தில் இது தொடர்பான விரிவான கலந்துரையாடல் ஒன்றை கொழும்பில் ஏற்பாடு செய்துள்ளமை தொடர்பிலும் ஏனைய மாவட்டங்களில் இருந்து மலையக மக்கள் முன்னணியுடன் இணைந்து செயற்படுவதற்கு விரும்புகின்றவர்கள் அடையாளம் காணப்பட்டு அவர்களையும் இணைத்துக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை தொடர்பாகவும் அவர் கருத்து தெரிவித்துள்ளார்.

# பிரபாகரனின் புகைப்படத்தை பதிவிட்டவருக்கு விளக்கமறியல்

நிதர்ஷன் வினோத்

தடை செய்யப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிரபாகரனின் புகைப்படத்தை முகநூலில் பதிவிட்டதாகக் கைதான இளைஞரை எதிர்வரும் 4ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

பயங்கரவாத தடுப்பு பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இணுவில் பகுதியைச் சேர்ந்த இளைஞன் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் பதில் நீதவான் முன்னிலையில்



ஞாயிற்றுக்கிழமை (01) முற்படுத்தப்பட்டார்.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் வழக்கு தாக்கல் செய்யப்பட்ட நிலையில் குறித்த இளைஞரை எதிர்வரும் 4ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

கைது செய்யப்பட்ட குறித்த இளைஞன் சார்பில் சட்டத்தரணி கனகரத்தினம் சுகாஷ் ஆஜரானார்.



# பட்டமளிப்பு நிகழ்வு

இலங்கை , ஊடகவியல் கல்லூரியில் 2024 ஆம் ஆண்டுக்கான வருடாந்த பட்டமளிப்பு நிகழ்வு, கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் புதன்கிழமை (27) நடைபெற்றது.

நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி செனேஷ் திஸாநாயக்க பண்டார, ஊடகக்கற்கைநெறியைப் பூர்த்திசெய்த மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கியுள்ளதுடன், இலங்கைப் பத்திரிகை ஸ்தாபனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி குமார் லோபஸ் மற்றும் இலங்கை ஊடகவியல் கல்லூரியின் பிரதித்தலைவி ஹனா இப்ராஹிம் ஆகியோர் நிகழ்வில் கலந்துகொண்டனர் .

# சுவர் இடிந்து விழுந்ததில் தொழிலாளி மரணம்

அனுராதபுரம் - நெலும்கண்ணிய பகுதியில் உள்ள பாழடைந்த வீடொன்றில் இருந்து செங்கற்களை அகற்றும் போது சுவரொன்று இடிந்து விழுந்ததில் தொழிலாளி ஒருவர் உயிரிழந்துள்ளதாக கவரக்குளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குருந்தன்குளம் பிரதேசத்தை சேர்ந்த 57 வயதுடைய காமினி பத்மதிலக என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச் சம்பவம்



சனிக்கிழமை (30) இடம்பெற்றுள்ளதுடன், விபத்தில் படுகாயமடைந்த நபர் அனுராதபுரம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார் எனவும் பொலிஸார் கூறியுள்ளனர்.

## யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பு தலைவராக

# அமைச்சர் சந்திரசேகர் நியமனம்

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவராக கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதியினால் கடந்த 28ஆம் திகதி முதல் அமுல்படுத்தப்படும் வகையில் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவராகப் பாராளுமன்ற உறுப்பினரும், கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவரது நியமனம் தொடர்பாக பொது நிர்வாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பேராசிரியர் ஏ.எச்.எம்.எச்.அபயரத்னவால்



கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சருக்கு முகவரியிடப்பட்டு யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபருக்கு கடிதம் மூலம் அறியத்தரப்பட்டுள்ளது.











# கடற்படைக்கு ஆசி

இலங்கை கடற்படையின் 74 ஆவது ஆண்டு நிறைவைத் தினம் எதிர்வரும் 09 ஆம் திகதி நடைபெறவுள்ளது.
இதனை முன்னிட்டு நடைபெறும் சமய நிகழ்ச்சிகளின் தொடரான இஸ்லாமியப் பிரார்த்தனை அமர்வு, சாத்தம் வீதியில் உள்ள ஜூம்மா மசூதியில் சனிக்கிழமை (30) நடைபெற்றது.


## விற்பனைக்கு

வத்தளை, ஹெந்தல,
பலங்கல வீதியில் 20 பேர்ச்சஸ்,
3,600 சதுர அடியில்,
3 படுக்கை அறைகள்
(குளிரூட்டப்பட்டது),
3 குளியலறைகள் கொண்ட 2 மாடி
சொகுசு வீடு விற்பனைக்கு உள்ளது.
கொழும்புக்கு 15 நிமிடங்கள்,
கெரவலப்பிட்டி நெடுஞ்சாலை
நுழைவாயிலுக்கு 8 நிமிடங்கள்,
நீர்கொழும்பு வீதிக்கு 3 கிலோ மீட்டர்,
ஹெந்தல- எலகந்த சந்திக்கு 350 மீட்டர்
தூரம். தொடர்புக்கு 071 277 9780

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 (2) பிரிவின் பிரகாரம், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கம்பனியின் கீழ் காணும் மாற்றம் தொடர்பான அறிவித்தலை இத்தால் நாம் வழங்குகின்றோம்.

**கம்பனியின் பழைய பெயர்:** சி.எச். ரொபின்சன் ஃப்ரைட் சர்விசஷ் லங்கா (பிரைவட்) லிமிட்டட்
**கம்பனியின் புதிய பெயர்:** ஃப்ரைட்நெட் (பிரைவட்) லிமிட்டட்
**பதிவு அலுவலக முகவரி:** இல 193, 06வது மாடி, டெனிஷ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 08
**கம்பனியின் இலக்கம்:** பீவீ 9622
**மாற்றம் நிகழ்ந்த திகதி:** 21.11.2024

**டைரக்டர்**
**க்ரஸ்டன் கோர்பரேட் சேர்விசஸ் (பிவிடி) எல்டீடி**
**கம்பனியின் செயலாளர்கள்**

# எதிர்கூறல்களுக்கு செவி சாய்த்து இடம்பெயர வேண்டியது பொறுப்பாகும்

இம்முறை ஏற்பட்ட வெள்ளத்தின் போது, பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான உலருணவு பொருட்களை அரசியல் கட்சிகள், சமூக அமைப்புகள் மற்றும் நலன் விரும்பிகள் வழங்கிவருகின்றன. தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் எவ்விதமான விளம்பரங்களும் இன்றி, முன்னெடுப்பதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.), தேசிய மக்கள் சக்தி, இதற்கு முன்னர் ஏற்பட்ட இயற்கை அனர்த்தங்களின் போதும், செய்த உதவிகளுக்குப் பிரசாரங்களைச் செய்யவில்லை. அதே அடியொட்டி இம்முறையும் செய்து கொண்டிருக்கின்றது. எனினும், இயற்கை அனர்த்தங்களால் பாதித்தோருக்கு, அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் வேலைத் திட்டம் திருப்திகரமானதாக இல்லை என்ற குற்றச்சாட்டுகளும் முன்வைக்கப்படுகின்றன.

இதற்கிடையில், தற்போது ஆபத்தில் உள்ள பகுதிகளுக்கு மேலதிகமாக சுமார் இருபது இடங்களிலிருந்து மக்களை வெளியேறுமாறு தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் கேட்டுக் கொண்டுள்ளது. அவ்வாறான இடங்களிலிருந்து வெளியேறும் மக்களுக்குத் தேவையான தற்காலிக பாதுகாப்பு இடங்களை ஒதுக்கிக்கொடுத்தல் அவசியமாகும். அதற்குப் பின்னர், நிரந்தர வதிவிடங்களை ஏற்படுத்தி கொடுத்த வேண்டும். இல்லையேல், பழைய பல்லவிகளே பாடப்படும்.

இலங்கையில் ஏற்படும் வெள்ள அபாயங்கள் குறித்து முன்னறிவித்து எதிர்வு கூறக்கூடும் உரிமை மேற்குறிப்பிட்ட நிறுவனத்துக்கு உண்டு. இந்த நிறுவனம் இலங்கையில் உள்ள அனைத்து கட்டிடங்களுக்கும் பொறுப்பாகும். எனினும், எதிர் கூறல்களுக்குச் செவிசாய்த்து, அங்கிருந்து தற்காலிகமாக இடம் பெயரவேண்டிய பொறுப்பு மக்களைச் சார்ந்ததாகும்.

மலைபாங்கான பிரதேசங்களில் கட்டப்பட்டிருக்கும் கட்டிடங்கள் மண் சரியும்போது, தரையில் படுத்துக்கொள்கின்றன. அப்போது அந்த நேரத்தில் அவற்றில் உள்ளவர்களும், கட்டிடத்தைச் சுற்றி இருப்பவர்களும் கை கால்களை உடைத்துக்கொண்டு மறு உலகத்திற்குச் செல்வார்கள். நகரின் ஓரத்தில் மலைகள் அருகே கட்டப்பட்டுள்ள சில குடியிருப்புகள் வெள்ளம் வராவிட்டாலும் இடிந்து விழுகின்றன.

வங்காள விரிகுடாவில் குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலையின் போது, பலத்த மழை பெய்து இலங்கையில் உள்ள ஆறுகள் பெருக்கெடுக்கத் தொடங்குகின்றன. அதன் பிறகு பெருவெள்ளமாக மாறிவிடுகிறது.

வெள்ளப் பேரிடர் தடுப்பு மற்றும் வெள்ளத் தயார்நிலை மிகவும் குறைவாகவே உள்ளது. எவ்வளவு மழை பெய்தாலும் நமக்கு வெள்ளம் நினைவுக்கு வராது. வேறொரு மாகாணத்தில் வெள்ளத்தில் பலர் இறந்த பிறகு அதை நினைவுபடுத்துகிறோம்.

வெள்ளத்தைக் கணிக்கும் தொழில்நுட்ப அறிவு நம் நாட்டிற்கு இருக்கிறதா என்பது நமக்கு உண்மையில் தெரியாது. பெரும்பாலான வளர்ந்த நாடுகள் இயற்கை பேரழிவுகளைத் தொழில்நுட்பத்தின் உதவியால் தப்பிப்பிழைக்கின்றன.

ஆனால், தொழில்நுட்பம் எவ்வளவு முன்னேறியிருந்தாலும், இயற்கை பேரழிவுகளில் மக்கள் இறக்கின்றனர். இயற்கை சீற்றங்களைக் கண்காணிக்கப் பயன்படுத்தப்படும் இயந்திரங்கள் பழுதடைந்து கிடப்பதே இதற்கு காரணம்.

எனவே, ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தலைமையிலான புதிய அரசாங்கத்தின் நிர்வாகத்தின் கீழாவது, எதிர்வரும் காலங்களில் இவ்வாறான இயற்கை அனர்த்தங்கள் ஏற்படுவதற்கு முன்னரான எச்சரிக்கை விடுப்பதும், அதற்கு செவிசாய்க்காதவர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கைகளை எடுப்பதும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.


தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.






அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

உங்களுடன் நண்பர்கள் சுற்றியிருக்க விரும்பும்போது, நீங்கள் தேவையில்லாமல் விலகினால், உங்களுக்கு மனச் சோர்வு இருக்கின்றது என்று அர்த்தம். இதற்கு ஒரே வழி, நீங்களே உங்களுடன் தோழமை கொள்வதுதான். உங்களுக்கு நீங்களே எஜமானன். அத்துடன், உங்களுக்கு நீங்களே நம்பிக்கையான நபரும் கூட!

ஒருவரிடம் பணம் இருக்கும்போது, அவரைச் சுற்றி, பலர் சேர்ந்துவிடுவார்கள். அவரிடம் இருக்கும் பணத்தைச் செலவழிக்கச் செய்த பின்னர், அவரைக் கைகழுவி, நடுத்தெருவில் விட்டு விடுவது உலக யதார்த்தம். ஆனால், நல்ல நண்பர் எத்தகைய துன்பங்கள் சூழ்ந்து வந்தாலும் காவல் செய்யும் காவலன் போல் இணைந்தே இருப்பான்.

நண்பர்கள் என்று நம்பி, அவர்கள் கெட்டவர்கள் என்று தெரியாமல் போனவர்களை நாங்கள் அன்றாடம் சந்தித்துக்கொண்டிருக்கின்றோம். நண்பர்களிடம் நம்பி இயலாது, என்னால் முடியாது எனும் எண்ணங்கள் தகர்க்கப்படல் வேண்டும். அனுபவப்பட்டவர்களுக்கு ரோசம் அதிகம். எளிதில் எவருடனும் நட்புக் கொள்ளல் ஆகாது. வீறு பெற்றவனை வீழ்த்த முடியாது. நடுவீதியில் தனிமைப்பட்டு நிற்பது பரிதாபமானது. எனவே, துணிவுடன் இயங்குவதே மனோபலத்தை உருவாக்கும்.

நன்றி-பருத்தியூர் பால.வயிரவநாதன்

## கடிதங்கள்

### காடுகளால் சூழப்பட்டுள்ள பாடசாலை



முல்லைத்தீவு-தேவிபுரம் பாடசாலையின் சூழலில் உள்ள காடுகளைத் துப்புரவு செய்வதற்குப் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பெற்றோர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பாடசாலை அரச காணியின் சுமார் 20 ஏக்கர் வரையான நிலப்பரப்பில் அதிக மரஞ்செடி, கொடிகள் வளர்ந்திருப்பதால், பாடசாலைக்குப் பாம்புகள் வருவதாகவும் பன்றிகளின் நடமாடுவதாகவும் தெரிவித்துள்ள பெற்றோர், இக்காடுகளில் சமூக விரோத செயற்பாடுகள் இடம் பெறுவதாகவும் பாடசாலைக்கு அருகில் மதுப் போத்தல்கள், நிறைந்து காணப்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும், குறித்த காணியினை காணியற்ற குடும்பங்களுக்குப் பிரித்து வழங்குங்கள். அல்லது பிரதேச செயலகத்தின் பொறுப்பில் குறித்த காணிகளைத் துப்புரவு செய்து மாணவர்கள் ஆசிரியர்களின் பாதுகாப்பினை உறுதி செய்யுங்கள் எனவும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளரிடம் தேவிபுரம் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

- நடராசா கிருஸ்ணகுமார்

லக்ஸ்மன்

# மக்கள் விரும்பும் தமிழ்த் தேசிய நிலைப்பாடு

வடக்கு, கிழக்கில் தமிழ்த் தேசிய அரசியலை நடத்திவருபவர்கள், கட்சிகளின் மீதான நம்பிக்கையும் ஆதரவும் மக்கள் மத்தியில் சரிந்து வருவதனை அவதானித்துவந்த நாம் கடந்த பாராளுமன்றத் தேர்தலில் அது விழுந்துவிட்டதனை கண்டோம். ஒவ்வொரு தேர்தல் முடிந்த பின்பும் வீழ்ச்சியைச் சரி செய்வதற்கான வேலைப்பாடுகள் தமிழ்த் தேசிய அரசியல்வாதிகளால் மேற்கொள்ளப்படும். அது போன்றதல்லாது, இம்முறை தூக்கியே நிறுத்தவேண்டி ஏற்பட்டுள்ளது. அதற்கான வழிகளை அவர்கள் இப்போது தேட ஆரம்பித்திருக்கின்றனர்.

கடந்த சில நாட்களுக்கு முன்பு சுமந்திரன் மீண்டும் தம் கட்சியினை தூக்கிப்பிடித்து புதிய அரசியலமைப்பு உருவாக்கத்தில் எமது நிலைப்பாட்டையே தமிழ் மக்கள் ஏற்றுள்ளனர் என்று தேர்தல் முடிவுகளை அடிப்படையாக வைத்து ஒரு கருத்தினை வெளியிட்டிருந்தார்.

அவர்களால் முன்னெடுக்கப்பட்ட புதிய அரசியலமைப்பு மாற்றத்துக்கான செயற்பாடுகள் பற்றிய பேச்சையே யாரும் எடுத்திருக்கா நிலையில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் இவ்வாறானதொரு கருத்தினை வெளியிட்டிருக்கிறார். இது தான் பெரிது என்கிற இறுமாப்பினையே காட்டிநிற்கிறது.

அதே வேளை, இலங்கையில் ஒற்றையாட்சியை மீறிய அரசியலமைப்பொன்று உருவாவதற்கான வாய்ப்புகளே இல்லை என்பது அனைவரும் அறிந்த விடயமாக இருக்கையில், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தமிழ் மக்கள் பேரவையினால் தயாரிக்கப்பட்ட தீர்வுத்திட்ட முன்மொழிவின் அடிப்படையில் முன்னெடுப்புக்கள் நடைபெறவேண்டும் என்று கருத்துக்களை வெளியிட்டுள்ளது.

அண்மையில் அக் கட்சியின் தலைவரும் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பாராளுமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றுக்கொண்டுள்ளது.

இவ்வாறான நிலையில் அவர்கள் அடுத்து வரும் காலப்பகுதியில் புதிய அரசியலமைப்பினை உருவாக்குவதற்கான செயற்பாடுகளை ஆரம்பிப்பார்கள் என்று எதிர்பார்க்கின்றோம்.

இந்தத் தருணத்தில் அவர்கள் ஏலவே மைத்திரி - ரணில், கூட்டாட்சி அரசாங்கத்தில் முன்னெடுக்கப்பட்ட ஒற்றையாட்சியை மையப்படுத்திய புதிய அரசியலமைப்புக்கான இடைக்கால அறிக்கையில் இருந்து ஆரம்பிக்கவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

குறித்த இடைக்கால அறிக்கையானது தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வதாக இல்லை. அது ஒற்றையாட்சியை முழுமையாக ஏற்றுக் கொண்டுள்ள ஒன்றாகும். குறித்த இடைக்கால அறிக்கையைத் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் முன்னெடுப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது.

என்று தெரிவித்திருந்தார். அதே நேரத்தில், தமிழ் மக்கள் பேரவையின் தீர்வுத் திட்ட முன்மொழிவை அடிப்படையாக வைத்து, ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகளுடன் பேச்சுக்களை நடத்துவதற்குத் தயாராக இருப்பதாகவும் அறிவித்திருந்தார்.

தமிழ்த் தேசிய அரசியல் பரப்பிலுள்ள கட்சிகளின் ஒருமிப்பு, ஒற்றுமையின் அவசியம் பற்றிக் கடந்த பல தேர்தல்களின் பின்னர் ஏற்பட்டு வந்த கோரிக்கையே என்ற வகையில் கஜேந்திரகுமாரினுடைய அறிவிப்பு நல்லதே.

ஆனால், பாராளுமன்றத்தில் தேசிய மக்கள் சக்திக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை காணப்படுவதன் காரணமாக அவர்கள் எந்தவிதமான முடிவுகளுக்கும் செல்லமுடியும்.

அது தமிழ் மக்களின் விருப்பத்துக்கு மாறாகவே இருக்கும் என்பதும் தற்போது அனைவராலும் உணரப்படுகிறது. இந்த நிலையில், தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்கின்ற வகையில், தமிழ்த் தரப்பின் கோரிக்கையாக வருகின்ற தமிழ் மக்கள் பேரவையின் அரசியல் தீர்வுக்கான வரைவினை அடிப்படையாக வைத்து அரசியலமைப்புச் செயற்பாட்டினை மேற்கொள்வதற்குத் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் உடன்படுமா என்பது கேள்விக்குறியானது.

அது இருக்க, தமிழ் மக்கள் பேரவையினால் தயாரிக்கப்பட்ட தீர்வுத் திட்டச் செயற்பாட்டில் சுமந்திரன் தவிர ஏனைய கட்சிகள் அனைத்துப் பிரதிநிதிகளும் பங்கேற்றிருந்தார்கள். இந்த நிலையில் அவர் குறிப்பிட்டிருக்கின்ற புதிய அரசியலமைப்பு உருவாக்கத்தில் எமது நிலைப்பாட்டையே தமிழர்கள் ஏற்றுள்ளார்கள் என்ற கருத்து முட்டுக் கட்டையாகவே தெரிகிறது.

நீண்டகாலமாக நாட்டில் புரையோடிப்போயுள்ள இனப் பிரச்சினைக்கான தீர்வாக, தமிழ் மக்களுக்கான நியாயமான அரசியல் தீர்வை வழங்க வேண்டியது அரசாங்கத்தின் கடமையாக இருந்தாலும், அதற்கு இழுத்தடிப்புகளையும் தட்டிக் கழிப்புகளையும் கடந்த காலங்களில் ஆட்சியிலிருந்த அரசாங்கங்கள் செய்து வந்திருக்கின்றன.

அதில் சில தமிழ் அரசியல்வாதிகளும், அரசியல் கட்சிகளும் சம்பந்தப்பட்டும், அனுசரணைகளை வழங்கியும் இருக்கின்றன. இவ்வாறான நிலையில், தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைக்கான தீர்வினை பெறல், தமிழ்த் தேசியத்தைப் பலப்படுத்தல் என்கிற நோக்கத்தில் சகல தமிழ்த் தேசியக் கட்சிகளும் ஒற்றுமையுடன் ஒருமித்துப் பயணிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலையில் சுமந்திரனுடைய கருத்து கருத்திலெடுக்கப்படவேண்டிய தேவையற்றதே.

தமிழ் மக்கள் பேரவையினால் முன்மொழியப்பட்ட தீர்வுத்திட்டம் குறித்து கருத்து வெளியிட்டுள்ள இலங்கை தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர், சி.சிறிதரன், தமிழ்த் தேசியக் கட்சிகள் ஆசன எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு இணைவதை விடுத்து கொள்கை ரீதியில் ஒன்றுபட்டுச் செயலாற்றவேண்டியது மிக அவசியம். குறிப்பாக, தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு என்று வருகிறபோது, சமஷ்டி அடிப்படையிலான தீர்வாக அது இருக்க வேண்டும் என்பதே தொடக்கத்திலிருந்து எமது நிலைப்பாடாக இருந்து வருகிறது. 13ஆவது திருத்த விடயத்தில் குழப்பங்கள் ஏற்பட்டுள்ளன.

நாம் எத்தகைய விட்டுக்கொடுப்புகள், தியாகங்களைச் செய்தாயினும் ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகளுடன் கொள்கை அடிப்படையில் இணைந்து பயணிப்பதற்குத் தயாராக இருக்கின்றோம் என்று தெரிவித்திருக்கிறார்.

அதே நேரத்தில், ரெலோவின் தலைவரும், ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன், தமிழ் மக்கள் பேரவையினால் தயாரிக்கப்பட்ட வரைபு, அனைத்து தமிழ்த் தேசிய கட்சிகளும் ஒன்றிணைந்து அடுத்தகட்டமாக என்ன செய்வது என்பது பற்றி ஆராய வேண்டும்.

அவற்றின் அடிப்படையில் புதியதொரு திட்டத்தை வகுத்துச் செயற்படுவதே தற்போதைய சூழ்நிலைக்குப் பொருத்தமானதாகவும், ஒற்றுமையை வலுப்படுத்துவதாகவும் அமையும் என்று தெரிவித்திருக்கிறார்.

அத்துடன், தமிழ் மக்கள் பேரவையினால் தயாரிக்கப்பட்ட தீர்வுத் திட்ட வரைவு விடயத்தில் அத் திட்டம் மீள் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட வேண்டும். அதனை யார் கையாள்வது? எப்படி? பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பது யார்? அதற்கான தலைமைத்துவத்தை வழங்குவது யார்? என்பன குறித்தும் கலந்துரையாடல்கள் நடத்தப்பட வேண்டும் போன்ற கருத்துக்களும் வெளியிடப்பட்டிருக்கின்றன.

வடக்கு கிழக்கைப் பொறுத்தவரையில், தமிழ்த் தேசிய அரசியல் செயற்பாட்டில் ஈடுபட்டுவரும் கட்சிகளுடைய கொள்கையும் செயற்பாடுகளும் தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கான நியாயமான தீர்வு ஒன்றினைப் பெற்றுக் கொடுப்பதாகவே இருக்கின்றன.

அந்தவகையில் சிதறிப் போயிருக்கின்ற ஏனைய கட்சிகளும் இந்த தீர்வுத்திட்ட விடயத்தில் இணைத்துக் கொள்ளப்படவும் வேண்டும். ஒரு தீர்மானமானது அனைவரும் ஒன்றிணைந்து மேற்கொள்ளப்படுவதாக இருக்க வேண்டும். மாறாக, ஒருவர் தீர்மானங்களை எடுத்து விட்டு, மற்றவர்கள் மீது திணித்தல் தவிர்க்கப்பட வேண்டும் என்ற கொள்கை இதில் கடைப்பிடிக்கப்படுதல் சிறப்பானது. வெறுமனே முன்வைப்புகளோடு நின்று விடாமல் அரசாங்கத்துடன் அணுகுதல், நகர்த்துதல், இறுதி வரை திடமாக நிற்றல் என அனைத்துவிதமான விடயங்களும் கவனத்திலெடுக்கப்படுதல் வேண்டும்.

எது எவ்வாறானாலும், தமக்குக் கிடைத்த பெரும்பான்மை மற்றும் வடக்கு, கிழக்கில் பெற்றுக் கொண்டு ஆசனங்களை வைத்துக் கொண்டு தமிழ் மக்கள் அவர்களது உரிமைகள் அனைத்தையும் கைவிட்டிருக்கிறார்கள் என்ற தோற்றப்பாட்டை ஏற்படுத்துவதற்கே தேசிய மக்கள் சக்தி முயன்றுவருகிற நிலையில் தமிழ்த் தரப்பினுடைய முயற்சி பலனளிக்குமா என்பது ஆராயப்படவேண்டியதாகவே இருக்கிறது.

கடந்தகால அனுபவங்களிலிருந்து பாடம் கற்றுக்கொள்ளாமல் வீணே இறுமாப்புகளையும், விட்டுக் கொடுப்பின்மையையும், தனிப்பட்ட கோப, தாப, விருப்பு வெறுப்புக்களையும், பொறாமையினையும், மேலாதிக்கத் தனத்தையும், கைக்கொண்டு தமிழ் மக்களின் நோக்கங்களையும் எதிர்பார்ப்புகளையும் மறந்து செயற்பட்டுவந்ததன் விளைவாக ஏற்பட்டிருக்கும் நிலையானது, தமிழ்த் தேசிய அரசியல் நீக்கத்திற்கே வழிவகுத்திருக்கிறது என்பது மறக்கப்படாதிருப்பது சிறந்ததாகும். அந்தவகையில், அரசாங்கத்துடன் முன்னெடுக்கப்படவுள்ள இந்த முயற்சி மக்களின் நிலைப்பாடறிந்து அவர்களின் விருப்பத்தினை முதன்மைப்படுத்தியதாக இருக்கட்டும்.

2024 மூன்றாம் காலாண்டில்

# SLT–MOBITEL நிதிசார் வளர்ச்சியை பதிவு செய்தது

2024இன் மூன்றாம் காலாண்டில் SLT-MOBITEL குழுமம் வரிக்கு பிந்திய இலாபமாக ரூ.1,093 மில்லியனை பதிவு செய்துள்ளது. கடந்த ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூ.1,543 மில்லியன் நட்டத்தை பதிவு செய்திருந்தமை குறிப்பிடத்துக்கது. அதனூடாக நிறுவனத்தின் இலாபம் 171% எனும் பெரும் இலாப அதிகரிப்பை பதிவு அடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. நிறுவனத்தைப் பொறுத்தமட்டில், ஸ்ரீலங்கா ரெலிகொம், 2024 மூன்றாம் காலாண்டில் ரூ.932 மில்லியனை பதிவு செய்திருந்தது. கடந்த ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் ரூ.651 மில்லியன் நட்டத்தை பதிவு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. அதனூடாக, நட்டத்திலிருந்து இலாபத்துக்கு வெற்றிகரமான மாற்றத்தை வெளிப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



காலாண்டில் குழுமம் ரூ.28.5 பில்லியனை திரண்ட வருமானமாக பதிவு செய்துள்ளதாகவும், முன்னைய ஆண்டில் இதே காலப்பகுதியில் பதிவாகிய ரூ.27.7 பில்லியனுடன் ஒப்பிடுகையில் இது 3% அதிகரிப்பு என்பதும் குறிப்பிடத்தக்கது. நிகர இலாபம் ரூ. 12.3 பில்லியனாக பதிவாகியிருந்ததுடன், முன்னைய ஆண்டின் ரூ.9.9 பில்லியனுடன் ஒப்பிடுகையில், இது 24.8% அதிகரிப்பாகும். குழுமத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட செலவு சேமிப்பு செயற்பாடுகளினூடாக இந்த அதிகரிப்பு பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

குழுமத்தின் EBITDA ஆனது, 2024 மூன்றாம் காலாண்டில் ரூ.10.5 பில்லியன் எனும் உறுதியான வளர்ச்சியை பதிவு செய்திருந்தது. இது முன்னைய ஆண்டில் பதிவாகிய ரூ.8 பில்லியனுடன் ஒப்பிடுகையில் இது 30.6% வளர்ச்சியாகும். மேலும், தொழிற்படு இலாபம் ரூ.3.6 பில்லியனை பதிவு செய்திருந்தது. முன்னைய ஆண்டின் ரூ. 549 மில்லியனுடன் ஒப்பிடுகையில் இது 551% மாபெரும் வளர்ச்சி என்பது குறிப்பிடத்தக்கது.

மறுபுறத்தில் குழுமம் 2024இன் மூன்றாம் காலாண்டில் பல்வேறு செலவு பிரிவுகளில் பெருமளவு சேமிப்புகளைஅடைந்துள்ளது. அவற்றில் வருடாந்த பராமரிப்பு செலவுகள் (AMC) மற்றும் பழுது பார்ப்பு செலவுகள் பிரிவில் பெருமளவு சேமிப்பு பதிவாகியிருந்தது. வருடாந்த ஒப்பீட்டு செலவுக் குறைப்பில் இது குறிப்பிடத்தக்களவு பங்களிப்பை வழங்கியிருந்தது. காலாண்டுக்கான செலவுகள் (மதிப்பிறக்கம் மற்றும் தேய்மானம் தவிர்ந்தவை) ரூ.18 பில்லியனாக பதிவாகியிருந்தது. முன்னைய ஆண்டின் ரூ.19.7 பில்லியனுடன் ஒப்பிடுகையில், இது 8.3% வீழ்ச்சியாகும். மேலும், நிதிசார் செலவுகள் 18.1% இனால் குறைவடைந்து, நேர்த்தியான நிதிசார் செயற்திறனுக்கு வலுவூட்டியுள்ளது.

நிறுவனமட்டத்தில் வருடத்தின் 3ஆம் காலாண்டிலில் SLT ரூ.18 பில்லியன் வருமானத்தை பதிவு செய்திருந்தது. கடந்த ஆண்டில் பதிவாகியிருந்த ரூ.17.5 பில்லியனுடன் ஒப்பிடுகையில் இது ரூ. 603 மில்லியன் உயர்வு என்பதுடன், 3.4%வளர்ச்சியை வெளிப்படுத்தியிருந்தது. நிகர இலாபமும் 2023இன் மூன்றாம் காலாண்டுடன் ஒப்பிடுகையில் இது 22.8% எனும் வளர்ச்சியை பதிவு செய்து ரூ.1.6 பில்லியனை எய்தியிருந்தது. மேலும், நிறுவனம் தனது தொழிற்படு செலவுகளை வெற்றிகரமாக கையாண்டிருந்தது. இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூ.638 மில்லியன் செலவு சேமிப்பை எய்தியிருந்தது. வருடாந்த பராமரிப்பு செலவுகள், பழுதுபார்ப்புகள் மற்றும் வாகன வாடகை செலவுகள் போன்றவற்றில் ஏற்பட்ட குறைவின் காரணமாக கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில், இது 5.4% வீழ்ச்சியை எய்தியிருந்தது.

EBITDA வளர்ச்சி ஆனது ரூ.1.2 பில்லியன் ஆக காணப்பட்டதுடன், இது 21.8% அதிகரிப்பாகும். நிறுவனம் மேம்படுத்தப்பட்ட தொழிற்படு வினைத்திறனை வெளிப்படுத்தியிருந்தது. தொழிற்படு இலாபம் ரூ. 2.5 பில்லியனாக உயர்வடைந்திருந்ததுடன், 2023 மூன்றாம் காலாண்டுடன் ஒப்பிடுகையில் 299% எனும் உயர்ந்த வளர்ச்சியை பதிவு செய்திருந்தது. நிறுவனம் தனது நிதிச் செலவுகளை சுமார் 28.2%இனால் குறைத்திருந்ததுடன், காலாண்டில் தேறிய இலாபத்திலும் வளர்ச்சியை பதிவு செய்திருந்தது.

குறிப்பாக, நிறுவனம் வரிக்கு பிந்திய இலாபத்தில் 243% எனும் குறிப்பிடத்தக்களவு வளர்ச்சியை எய்தியிருந்தது. இது 2023 மூன்றாம் காலாண்டுடன் ஒப்பிடுகையில், ரூ.1.6 பில்லியன் உயர்வாகும். அதனூடாக வினைத்திறனான நிதிசார் முகாமைத்துவம் மற்றும் வளர்ச்சிக்கான மூலோபாயங்களின் வெற்றிகரமான நடைமுறைப்படுத்தல் போன்றவற்றை வெளிப்படுத்தியிருந்தது.

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், மொபிடெல் நிறுவனமானது பிரதான குறிகாட்டிகளில், 2024இன் மூன்றாம் காலாண்டில் மொபிடெல் பெருமளவு முன்னேற்றங்களை வெளிப்படுத்தியிருந்தது. வருமானம் 7.9% இனால் அதிகரித்து ரூ.11.7 பில்லியனாக பதிவாகியிருந்ததுடன், புரோட்பான்ட் வளர்ச்சியினால் பெருமளவில் வழிநடத்தப்பட்டிருந்தது. EBITDA பெறுமதி 40%இனால் வளர்ச்சியடைந்து ரூ.3.6 பில்லியனாக பதிவாகியிருந்தது. அதனூடாக உறுதியான தொழிற்பாட்டு வினைத்திறன் பிரதிபலிக்கப்பட்டிருந்தது. குறிப்பாக, மொபிடெல், ரூ.898 மில்லியன் எனும் நேர்த்தியான தொழிற்பாட்டு இலாபத்தை பதிவு செய்திருந்தது. முன்னைய இழப்புகளுடன் ஒப்பிடுகையில், குறிப்பிடத்தக்களவு திருப்பமாக அமைந்திருந்ததுடன், தேறிய இலாப முன்னேற்றமாக 102%ஐ பதிவு செய்திருந்தது. அதனூடாக வெற்றிகரமான வளர்ச்சி மற்றும் வினைத்திறனான செலவு முகாமைத்துவ மூலோபாயங்களையும் வெளிப்படுத்தியிருந்தது.

SLT மற்றும் மொபிடெல் வியாபார அலகுகளில் குழுமம் இலாபகரத்தன்மையை 2024 மூன்றாம் காலாண்டில் பதிவு செய்திருந்தது.

பண்டிகைக்கால ஷொப்பிங்கை

# தீவிரப்படுத்தும் கொமர்ஷல் வங்கி



பண்டிகைக் கால ஷொப்பிங்கானது நுகர்வோர் எண்ணங்களில் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கியுள்ள நிலையில், இலங்கையின் கொமர்ஷல் வங்கியானது, கடனட்டை மற்றும் டெபிட் அட்டை வைத்திருப்பவர்களுக்காக அதன் வருடாந்த ஆண்டு இறுதி விலைக் கழிவு சலுகை பொனான்ஸாவை வெளியிட்டது.

இலங்கை முழுவதும் உள்ள 4,000 வர்த்தக விற்பனை நிலையங்கள் 2024 டிசெம்பர் 31 வரை தேர்ந்தெடுக்கப்பட்ட நாட்களில் 50% வரையிலான விலைக்கழிவு சலுகையை அதன் அட்டைதாரர்களுக்கு வழங்கவுள்ளதாக வங்கி அறிவித்துள்ளது.


இந்த விலைக்கழிவு சலுகைகள் 187 வர்த்தக பங்குதாரர்களான ஆடை மற்றும் ஆடை அணிகலன் விற்பனையாளர்கள், 62 வாழ்க்கை முறை உற்பத்தி பங்குதாரர்கள், 26 காலணிகள் விற்பனை பங்குதாரர்கள் மற்றும் தோல் பொருட்கள் சில்லறை விற்பனையாளர்கள், 74 ஹோட்டல் பங்குதாரர்கள், 22 ஆபரண பங்குதாரர்கள், 18 சுகாதார பராமரிப்பு பங்குதாரர்கள், ஒன்பது சிகையலங்கார நிலையங்கள், ஸ்பா மற்றும் அழகுசாதனப் பங்குதாரர்கள், ஐந்து அங்காடிச் சந்தை பங்குதாரர்கள் ஒன்பது வாகன விற்பனை பங்குதாரர்கள், ஆறு கடிகாரங்கள் மற்றும் அணிகலன்கள் பங்குதாரர்கள் மற்றும் ஏழு உணவு பங்குதாரர்கள் ஆகியோரால் வழங்கப்படும் என்று வங்கி தெரிவித்துள்ளது.

இதற்கு மேலதிகமாக, 90 இணையத்தள விற்பனையாளர் பங்குதாரர்கள் இந்த பண்டிகை ஊக்குவிப்பு காலத்தில் கொமர்ஷல் வங்கியின் கடனட்டை மற்றும் டெபிட் அட்டை வைத்திருப்பவர்களுக்கு விலைக்கழிவு சலுகைகளை வழங்கவுள்ளனர்.

இந்த ஊக்குவிப்பு குறித்து கருத்து தெரிவித்த கொமர்ஷல் வங்கியின் அட்டை நிலையத்தின் தலைவர் நிஷாந்த டி சில்வா, ‘எங்கள் பருவகால அட்டை ஊக்குவிப்பு ஒவ்வொரு வருடமும் விரிவாக்கப்பட்டு வருகிறது, மேலும் பல வர்த்தக பங்குதாரர்கள் இந்த திட்டத்தில் இணைந்திருப்பதால், அட்டைதாரர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

இது, கொமர்ஷல் வங்கி அட்டை ஊக்குவிப்புத் தொழிலில் மிகவும் எதிர்பார்க்கப்பட்ட ஒன்றாகவும், சலுகையில் உள்ள தயாரிப்புகள் மற்றும் சேவைகளின் அடிப்படையில் மிகவும் மாறுபட்ட ஒன்றாகவும் மாறியுள்ளது. பண்டிகைக் காலத்தைக் கொண்டாடும் போது, சேமிக்க இது ஒரு சிறந்தவாய்ப்பாக திகழ்கிறது.

இந்த பண்டிகைக்கால ஊக்குவிப்பில் பங்குபெறும் வர்த்தகர்கள் மிகப்பெரிய அளவிலான சலுகைகளை வழங்குகின்றனர், வாடிக்கையாளர்களுக்கு அற்புதமான பலன்களை வழங்கும் பரந்த அளவிலான விற்பனை நிலையங்களில் இருந்து ஏராளமான விலைக்கழிவு சலுகைகள் கிடைக்கின்றன.



# சமூக ஊடகங்களும் பெண்களுக்கெதிரான இணைய வழி வன்முறைகளும்



நா.உசாந்தினி,
இரண்டாம் வருடம்,
இரண்டாம் அரையாண்டு,
யாழ்.பல்கலைக்கழகம்.

தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் ஏற்பட்ட அபரிதமான வளர்ச்சி அச்சு தொடர்பாடலில் இருந்து, இன்று நவீன தொடர்பாடல் வரை வளர்ச்சி அடைந்திருக்கின்றது.

இது பரந்த உலகை சிறு கண்ணாடிக்குள் காண்பது போன்றது. நாகரீகத்தின் வளர்ச்சியும் அறிவியல் ஆற்றலும் மனிதனின் ஆர்வத்தைத் தூண்டிவிடுகின்றன. விரிந்த உலகம் இன்று தொழில்நுட்பத்தால் ஓர் கூரைக்குள் சுருங்கி விட்டது எனலாம். உலகின் ஏதோ ஒரு மூலையில் இடம்பெறுகின்ற நிகழ்வுகள் அடுத்த கனமே அனைவரும் அறிந்து கொள்ளும் அளவுக்கு ஊடகங்கள் இன்று வீறு நடை போடுகின்றன.

இவற்றில் சமூக ஊடகம் என்று நோக்குகின்ற போது, தகவல்களைப் பகிர்வதற்கும், உறவுகளைப் பேணுவதற்கும், மற்றவர்களுடன் தொடர்பு கொள்ளும் ஒரு மாறுபட்ட ஒன்லைன் தளத்தொகுப்பு அல்லது தள வடிவமைப்பு ஆகும். செய்திகள், நிகழ்ச்சிகள், ஆராய்ச்சிகள் போன்றவற்றை உடனடியாக பகிர்ந்து கொள்வதற்கும் நண்பர்கள் மற்றும் குடும்பத்துடன் தனிப்பட்ட தொடர்பினை ஏற்படுத்தி புகைப்படங்கள் எடுத்து கொள்வதற்கும் பயன்படுத்தப்படுகின்றது.

சமூக பிரச்சினைகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துதற்கும் அரசியல் நிகழ்வுகள் மற்றும் கருத்துக்களை பரிமாற்றுவதற்கும் இன்று அதிகளவில் பயன்படுத்தப்படுகின்றன.

இவற்றில் facebook , twitter, google, whatshop, intagram போன்ற சமூக ஊடகங்களினை குறிப்பிடலாம்.

சமூக ஊடகத்தின் சரியான பயன்பாடு வாழ்க்கையை வளமாக மாற்ற உதவுகிற அதேசமயம், தவறாகப் பயன்படுத்துகின்ற போது, தனியுரிமை பிரச்சினைகள் மற்றும் வன்முறைகளுக்கு வழிவகுக்கின்றன என்பதில் எந்த ஐயமும் இல்லை இணையத்தினூடாக ஒருவர் கேலி செய்யப்பட்டாலோ அச்சுறுத்தப்பட்டலோ, மிரட்டப்பட்டலோ, பாரபட்சத்துக்கு உள்ளாக்கப்பட்டாலோ அல்லது கட்டாயப்படுத்தப்பட்டாலோ அது இணையவழி வன்முறை என கொள்ளப்படுகின்றது.

ஆனாலும், முதலாளித்துவ ஆணாதிக்க முடைய உலகில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் இந்த சமூக ஊடகங்களின் மூலம் உருவாக்கம் பெறுகின்றன.

இலங்கையில் சுமார் 65 சதவீதமான பெண்கள் சமூக ஊடகங்களுக்கு அடிமையாகியுள்ளனர்.

அதிலும், இன்ஸ்டாகிராம் fackebook, tiktok போன்ற தளங்களில் அதிக நேரத்தைச் செலவிடுகின்றனர். அத்துடன், 40% - 50% பெண்கள் சமூக ஊடகங்களுக்கு அடிமையாவதால் மன அழுத்தம், ஓய்வின்மை பிரச்சினைகளைச் சந்திக்கின்றனர்.

குறிப்பாகப் பெண்கள் தமது புகைப்படங்கள் வீடியோக்களை சமூக வலைத்தளங்களில் பதிவேற்றம் செய்கின்றபோது, அப்படங்களை எடுத்துத் திருத்தி, ஆபாச படங்களாக மாற்றி, அவற்றினை இணையத்தில் போடுவதாக மிரட்டி பணம் சம்பாதிக்கின்ற பிரச்சினைகள் தோற்றம் பெறுகின்றன. அத்தோடு, தொடர்பு எண், முகவரி, மற்றும் பணி விபரங்கள் போன்றவற்றினை அனுமதியின்றி, திருடுதல் கணக்குகளை ஹேக் செய்து அவர்களது தனி உரிமையை மீறுகின்ற செயற்பாடுகள் இங்கு இடம் பெறுகின்றன.

மேலும், பெண் சமூகத்தின் எதிர்கால சிந்தனையின் பொருட்டு சமூக முன்னேற்றக் கருத்துக்களை சமூக ஊடகங்களில் தமது குரலாக வெளியிடுகின்ற போது, சிலர் அதைத் தவறாகப் புரிந்து அல்லது ஏன்? பெண்கள் இதைப் பற்றிக் கதைக்க வேண்டும் என்ற எண்ணப்பாங்கில் அவளின் கருத்துக்களை வெறுப்பூட்டுகின்ற வகையில், கொமெண்ட் பண்ணுதல் திரித்து அவதூறு பரப்புகின்ற செயல்பாடு போன்றன இடம் பெறுகின்றன.

இவ்வாறான செயற்பாட்டால் அப்பெண்ணின் எதிர்காலம் கேள்விக்குறியாகின்ற நிலை ஏற்படுகின்றது. இதனால் மற்றவர்கள் மத்தியில் தவறான ஒரு விம்பம் சித்தரிக்கப்படுகின்றது.

இன்று இலங்கையில் சுமார் 25 சதவீதமான பெண்கள் பயமுறுத்துதல் மற்றும் மிரட்டல்கள் மூலம் பாதிக்கப்பட்டுள்ளனர். குறிப்பாகப் பெண்களை ஒன்லைன் பாலியல் ரீதியாகக் கிண்டல் செய்வது, தீங்கு விளைவிக்கக்கூடிய உபாயங்கள் என்பன இவற்றில் உள்ளடங்குகின்றன.

குறிப்பாக 15 சதவீதமானவர்கள் பாலியல் துன்புறுத்தல் மிரட்டல்களுக்கு உள்ளாகுவதாக என புள்ளி விவரங்கள் குறிப்பிடுகின்றன.

மேலும் ஒருவர் புதிய கணக்குகளை ஆரம்பித்து, பாலியல் ரீதியாகத் தூண்டலினை ஏற்படுத்தக்கூடியவாறு கதைக்கின்ற போக்கும் சமூகத்தில் புரையோடிக் கிடக்கின்றது. இதனால் குடும்பங்களிடையே முறுகல் நிலை தோற்றம் பெற வழியேற்படுகின்றது.

தற்போது சமூக ஊடகங்கள் நாம் வாழும் விதத்தையே மாற்றியுள்ளன.

இலங்கையில் இணைய வழி குற்றங்கள் அதிகரித்து வருவதால், இவற்றைத் தடுத்து நிறுத்தவும், பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கவும் அரசு பல்வேறு சட்டங்களை இயற்றி வருகின்றது.

இலங்கையில் 1996ஆம் ஆண்டின் 37ஆம் இலக்க தொலைத்தொடர்பு திருத்தம் சட்டம் நிறுவப்பட்டது. இந்தச் சட்டமானது இலங்கையில் தொலைத்தொடர்புத் துறையை ஒழுங்குபடுத்துவதற்கான முதன்மையான சட்டமாகும்.

இதில் வழி குற்றங்கள் தொடர்பான சில விதிகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

தண்டனைச் சட்டத்தில் இணைய வழி குற்றங்களுக்குரிய தண்டனைகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

இந்த சட்டமானது இணைய வழி குற்றங்களான இணைய வழி வன்முறை, பாலியல் துன்புறுத்தல், தனிப்பட்ட தகவல் திருட்டு போன்ற குற்றங்களைத் தடுப்பதே இதன் முக்கிய நோக்கமாகும்.

மேலும், பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைப்பதை உறுதி செய்தலாகும், இலங்கை கணினி அவசர தயார்நிலை குழு இது இலங்கையில் இணைய பாதுகாப்பு தொடர்பான பிரச்சினைகளை கையாளும் அரசாங்க நிறுவனமாகும்.

இது இணைய வழி குற்றங்கள் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதிலும், இணைய குற்றங்களை தடுப்பதிலும், முக்கிய பங்கு வகிக்கின்றது மற்றும் இணைய வழி வன்முறை குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தலும், பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவும் வகையில் ஆலோசனை மையங்கள், உதவி எண்களை அமைப்பதன் மூலம் குற்றத்தினை குறைத்துக்கொள்ள முடியும். இதற்காக பாடசாலைகளிலும் கல்லூரிகளிலும் இது குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தி விளிப்புணர்வை ஏற்படுத்தல்.

ஊடக நிறுவனங்கள் தங்களது ஊடகங்களில் நடைபெறும் வன்முறைச் செயல்களை தடுக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் குறிப்பாக புகார்களை விரைவாக விசாரித்து, குற்றவாளிகளின் கணக்குகளை முடக்குதல் அவர்களுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்தல், தங்கள் பாதுகாப்புகளை தாமே உறுதிப்படுத்த வேண்டும் மேலும் ஒவ்வொரு தனிநபரும் இணையத்தினை பாதுகாப்பாக கையாளுவதன் மூலம் வன்முறைகளை குறைத்துக் கொள்ள முடியும்.

மேலும், இணையத்தில் தனிப்பட்ட தகவல்களை பகிர்வதைத் தவிர்த்தல், வலுவான கடவுச்சொற்களை பயன்படுத்துதல், அநாமதேய இணைப்புகளை கிளிக் செய்தலினை தவிர்த்தல், தெரியாத நபர்களிடம் தகவல்களை பகிர்வதைத் தவிர்த்தல், இணைய வழி குற்றங்கள் நிகழ்ந்தால் உடனடியாக பொலிஸில் புகார் செய்தல் போன்றவற்றினை கடைப்பிடிக்pகன்ற போது வன்முறையில்ல எதிர்காலத்தை உருவாக்க முடியும்.

சமூக ஊடகங்களை பயன்படுத்தும் ஒவ்வொரு பிரஜையும் சமூக பொறுப்புடன் செயல்படுத்தல் அவசியமாகும். பிரஜைகள் தாங்கள் சார்ந்த சமூகத்தை மாத்திரம் அல்லாமல் அனைத்து மக்களையும் பாதிக்காதவகையில் தமது பதிவுகளை சமூக ஊடகங்களில் மேற்கொள்வது அவசியம் ஒருவரை காயப்படுத்துகின்ற சொற்பிரயோகங்களை தவிர்த்தல், கட்டுக்கதைகள் மற்றும் வன்முறைகளை தூண்டக்கூடிய விவரங்கள் என்பவற்றை தவிர்த்து தனது பிரஜைகள் ஊடகவியலை முன்னெடுத்தல் வேண்டும்.



# நிவாரணம்...

**கடந்த பல நாட்களாக நாட்டில் நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு உள்ளிட்ட இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டு நிர்க்கதிக்கு உள்ளாகியுள்ள மக்களுக்குத் தேவையான உலருணவு பொதிகள் பல்வேறு தரப்பினராலும் வழங்கிவைக்கப்பட்டது.**



தம்பலகாமம், கோயிலடி, புதுக்குடியிருப்பு, பாலம்போட்டாறு ஆகிய கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்த சுமார் 100 குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள், அரச சார்பற்ற நிறுவனமான முஸ்லிம் எயிட் ஊடாக சனிக்கிழமை (30) வழங்கி வைக்கப்பட்டன. தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதியின் வழிகாட்டுதலுக்கு இணங்க இந்த உலருணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

- ஏ.எச்.ஹஸ்பர்






மட்டக்களப்பு-கல்குடா பிரதேசத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹவின் நிதி உதவியின் கீழ், வாழைச்சேனை அன்னூர் தேசிய பாடசாலையின் 2008ஆம் ஆண்டு பழைய மாணவர் சங்கத்தின் சதக்கா அறக்கட்டளை ஊடாக உலருணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.





வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட காரைதீவு, நிந்தவூர் மற்றும் மாளிகைக்காடு பிரதேசங்களுக்கு மாளிகைக்காடு சமூக அபிவிருத்தி சபை, ஜாஹீர் பௌண்டஷன், சமூக அபிவிருத்தி அமையம் ஆகியவற்றின் உதவியுடன் பாதுகாப்பான நீர்த்தாங்கிகள் வழங்கி வைக்கப்பட்டன.

- நூருல் ஹுதா உமர்



இயற்கை பாதிப்புக்குள்ளான பிரதேசங்களுக்கு நேரில் சென்ற நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் இ.தொ.கா. பொதுச் செயலாளருமான ஜீவன் தொண்டமான், அங்கு ஏற்பட்ட அழிவுகளைப் பார்வையிட்டதுடன், பாதிக்கப்பட்டவர்களுக்கு உலருணவு பொதிகளை வழங்கி வைத்தார்.

இதில் முதற்கட்டமாக டிக்கோயா, பொகவந்தலாவ, அக்கரபத்தனை ஆகிய பகுதி மக்களுக்கு நிவாரணப் பொதிகள் சனிக்கிழமை (30) வழங்கி வைக்கப்பட்டன.



வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கந்தாளாய் பிரதேச மக்களுக்காக ஆயிரம் கிலோ கிராம் (1000 KG) கோதுமை மாவினை திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் கந்தளாய் பள்ளிவாசல் சம்மேளனத்திடம் சனிக்கிழமை (30) வழங்கி வைத்தார்.

- எப்.முபாரக்





வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட காரைதீவு மக்களுக்கு மார்க்கண்டு அறக்கட்டளை எனும் அமைப்பு உலருணவு நிவாரணங்களை ஞாயிற்றுக்கிழமை(10) வழங்கி வைத்தது.

இராமகிருஷ்ண மிஷன் சுவாமி நடராஜானந்தா ஜீயின் 121ஆவது ஜனன தினத்தையொட்டி இந்த நிகழ்வு இடம்பெற்றது.

- வி.ரி.சகாதேவராஜா

அமெரிக்கா

### பிரிக்ஸ் உறுப்பு நாடுகளுக்கு ட்ரம்பின்

# பகிரங்க எச்சரிக்கை



அமெரிக்க ஜனாதிபதியாகப் பதவியேற்கவுள்ள டொனால்ட் ட்ரம்ப், அமெரிக்க டொலருக்கு பதிலாக மற்றொரு நாணயத்தை உருவாக்கவோ அல்லது ஆதரிக்கவோ கூடாது என பிரிக்ஸ் (BRICS) உறுப்பு நாடுகளைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

இதற்கு மாறான நடவடிக்கைகளில் ஈடுபடும் நாடுகள் 100 சத வீத வரிகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்று அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து, அவர் தனது எக்ஸ் வலைத்தளத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

“பிரிக்ஸ் உறுப்பு நாடுகள் புதிதாக எந்த நாணயத்தையும் உருவாக்கக் கூடாது. மேலும், ஏற்கெனவே இருக்கும் வேறு நாட்டு நாணயத்தையும் பயன்படுத்தக் கூடாது.

சர்வதேச வியாபாரங்களுக்கு பிரிக்ஸ் நாடுகள் அமெரிக்க டொலரை மட்டுமே பயன்படுத்த வேண்டும். இதை மாற்ற நினைக்கும் நாடுகளுக்கு 100 சதவீதம் வரை கூடுதல் வரி விதிக்கப்படும்.

அவர்களுக்கு வேறொரு ஏமாளி கிடைத்தால் அவர்களுடன் வியாபாரம் செய்யட்டும். டொலர் வேண்டாம் என்றால் அமெரிக்காவுடன் உள்ள உறவையும் துண்டித்துக் கொள்ளுங்கள். இல்லையெனில், அமெரிக்கப் பொருளாதாரத்தில் விற்பனை செய்வதிலிருந்து விடைபெற்று கொள்ளலாம். பிரிக்ஸ் நாடுகள் டொலரை தவிர்க்க முயற்சிக்கும் போது நாங்கள் வேடிக்கை பார்த்த காலம் முடிந்து விட்டது” என்று பதிவிட்டுள்ளார்.

பங்களாதேஷ்

# இந்து கோவில்கள் மீது தாக்குதல்

பங்களாதேஷில் மேலும் 3 கோவில்கள் மீது வன்முறை கும்பல் தாக்குதல் நடத்தியுள்ளது.

இதையடுத்து, இஸ்கான் அமைப்பினர் உட்பட 17 பேரின் வங்கிக் கணக்குகள் முடக்கப்பட்டுள்ளன.

அத்துடன், இஸ்கான் முன்னாள் தலைவர் சின்மோய் கிருஷ்ணதாஸ் தேசத் துரோக வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், அவரை பார்க்கச் சென்ற இன்னொரு பூசாரியும் கைது செய்யப்பட்டுள்ளார்.

பங்களாதேஷில், இடைக்கால அரசு பதவியேற்ற பிறகு, சிறுபான்மையினராக உள்ள இந்துக்கள் மற்றும் கோவில்கள் மீது தொடர்ந்து தாக்குதல் நடத்தப் பட்டு வருகிறது. இந்துக்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்துள்ளன.

இதற்கு எதிராக இஸ்கான் அமைப்பின் முன்னாள் தலைவர் சின்மோய்தாஸ் தலைமையில் பல்வேறு போராட்டங்கள், ஊர்வலங்கள் நடைபெற்று வந்துள்ளன.

இந்த சூழலில், போராட்டத்தைத் தடுக்கும் விதமாக, சின்மோய் கிருஷ்ணதாஸை தேச துரோக வழக்கில் அந்நாட்டு அரசு கைது செய்தது. அவருக்குப் பிணையும் மறுக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா

### ட்ரம்ப் பதவியேற்பை முன்னிட்டு

# வெளிநாட்டு மாணவர்களுக்கு அழைப்பு



அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்பை முன்னிட்டு, அமெரிக்காவில் உள்ள பல்வேறு கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் படித்து வரும் வெளிநாட்டு மாணவர்களில், தற்போது சொந்த நாட்டிற்குச் சென்றுள்ள மாணவர்களை உடனடியாக அமெரிக்காவிற்குத் திரும்புமாறு அந்தந்த கல்லூரிகளின் சார்பில் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

ட்ரம்ப் ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர், சர்வதேச பயணங்கள் தொடர்பாகக் கட்டுப்பாடுகள் அல்லது தடைகள் விதிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுவதாகவும், அதன் காரணமாகவே இத்தகைய அறிவுறுத்தல்கள் வழங்கப்படுவதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

அமெரிக்க பல்கலைக்கழகங்களில் பயிலும் வெளிநாட்டு மாணவர்களில் சுமார் 54 சதவீதம் பேர் இந்தியா மற்றும் சீனாவைச் சேர்ந்தவர்கள் என்று, அமெரிக்க அரசின் கல்வி மற்றும் கலாசார விவகாரங்கள் துறை தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

கொல்கத்தா

### பங்களாதேஷ் நோயாளிகளுக்கு

# சிகிச்சை வழங்க மறுப்பு




பங்களாதேஷை சேர்ந்த நோயாளிகள் எவருக்கும், காலவரையின்றி சிகிச்சை அளிக்கப்படாது என கொல்கத்தா வைத்தியசாலை அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது.

பங்காளதேஷில், இந்துக்களுக்கு எதிரான வன்முறைகள் கட்டவிழ்த்து வரப்படுகின்றன. இதனைத் தொடர்ந்து, மத்திய வெளிவிவகார அமைச்சு, இந்துக்களை பாதுகாக்கும்படி பங்காளதேஷ் அரசை வலியுறுத்தியுள்ளது. இந்த சூழலில், இந்தியாவின் மூவர்ணக் கொடியும் அவமதிக்கப்பட்டுள்ளது என கூறப்படுகிறது. இதனால், பங்காளதேஷ் நோயாளிகளுக்குச் சிகிச்சை கிடையாது என வடக்கு கொல்கத்தா வைத்தியசாலை முடிவு செய்துள்ளது.

இதுபற்றி ஜே.என்.ரே. வைத்தியசாலையைச் சேர்ந்த அதிகாரி சுப்ரான்ஷூ பக்த் கூறும்போது, “இந்தியாவுக்கு எதிராகப் புண்படும் வகையில் நடந்து கொண்டதற்காக, பங்காளதேஷ் நோயாளிகள் யாருக்கும் சிகிச்சை அளிக்க போவதில்லை சனிக்கிழமை (30) முதல் காலவரையின்றி சிகிச்சையளிக்கப்படாது” என கூறியுள்ளார்.



குஜராத்

### குப்பைகளை எரித்து

# குளிர்காய்ந்த சிறுமிகள் பலி

குஜராத் மாநிலத்தின் சூரத் நகர், பாலி கிராமத்தில், குப்பைகளை எரித்துக் குளிர் காய்ந்த 3 சிறுமிகள் உயிரிழந்துள்ளனர்.

குறித்த கிராமத்தில் 5 சிறுமிகள், வயல் பகுதியில் குப்பையைக் குவித்து தீ வைத்து, அதன் முன் விளையாடிக் கொண்டிருந்தனர். அப்போது குப்பையிலிருந்து நச்சுப் புகை வெளியேறியுள்ளது. அதைச் சுவாசித்தும் அவர்கள் வாந்தி எடுத்து, மயங்கி விழுந்துள்ளனர்.

அவர்கள் அனைவரும் தனியார் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டபோது, அவர்களில் மூன்று சிறுமிகள் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்த சிறுமிகள், 8, 12, 14 வயதுடையவர்கள் ஆவர். ஆரம்பக் கட்ட விசாரணையில் நச்சுப் புகை காரணமாக இவர்கள் உயிரிழந்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.



### முதலாவது டெஸ்டில்

# நியூசிலாந்தை வீழ்த்திய இங்கிலாந்து

நியூசிலாந்துக்கெதிரான முதலாவது டெஸ்டில் இங்கிலாந்து வென்றது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரில், கிறைஸ்ட்சேர்ச்சில் வியாழக்கிழமை (28) ஆரம்பித்த இப்போட்டியில், முதலில் துடுப்பெடுத்தாடப் பணிக்கப்பட்ட நியூசிலாந்து, கேன் வில்லியம்சனின் 93, கிளென் பிலிப்ஸின் ஆட்டமிழக்காத 58, அணித்தலைவர் டொம் லேதமின் 47, றஷின் றவீந்திரவின் 34 ஓட்டங்களோடு சகல விக்கெட்டுகளையும் இழந்து தமது முதலாவது இனிங்ஸில் 348 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், பிறைடன் கார்ஸ், ஷொய்ப் பஷிர் ஆகியோர் தலா 4 விக்கெட்டுகளையும், குஸ் அட்கின்ஸன் 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு தமது முதலாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து, ஹரி ப்றூக்கின் 171, அணித்தலைவர் பென் ஸ்டோக்ஸின் 80, ஒலி போப்பின் 77, குஸ் அட்கின்ஸனின் 48, பென் டக்கெட்டின் 46, கார்ஸின் ஆட்டமிழக்காத 33 ஓட்டங்களோடு சகல விக்கெட்டுகளையும் இழந்து 499 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், மற் ஹென்றி 4, நாதன் ஸ்மித் 3, டிம் செளதி 2, வில் ஓ ரூர்க் ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

இந்நிலையில், தமது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து, கார்ஸ் 6, கிறிஸ் வோக்ஸ் 3, அட்கின்ஸனிடம் விக்கெட்டுகளைப் பறிகொடுத்து சகல விக்கெட்டுகளையும் இழந்து 254 ஓட்டங்களையே பெற்றது. துடுப்பாட்டத்தில் டரைல் மிற்செல் 84, வில்லியம்சன் 61 ஓட்டங்களைப் பெற்றனர்.

அந்தவகையில் 104 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து, ஜேக்கப் பெத்தெல்லின் ஆட்டமிழக்காத 50 ஓட்டங்களோடு 2 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது. பந்துவீச்சில் ஹென்றி, ஓ ரூர்க் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர்.

இப்போட்டியின் நாயகனாக கார்ஸ் தெரிவானார்.



### மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான இரண்டாவது டெஸ்டில்

# பங்களாதேஷ் 69/2

மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான இரண்டாவது டெஸ்டின் முதல் நாள் முடிவில் தமது முதலாவது இனிங்ஸில் 2 விக்கெட்டுகளை இழந்து 69 ஓட்டங்களை பங்களாதேஷ் பெற்றுள்ளது.

இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியில், மேற்கிந்தியத் தீவுகள் வென்ற நிலையில், ஜமைக்காவில் சனிக்கிழமை(30) ஆரம்பமான இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற பங்களாதேஷ் அணித்தலைவர் மெஹிடி ஹஸன் மிராஸ் தமதணி முதலில் துடுப்பெடுத்தாடுமென அறிவித்திருந்தார்.

ஈரமான மைதானம் காரணமாக ஆரம்பிக்க வேண்டியதிலிருந்து ஐந்து மணித்தியாலங்கள் தாமதமாகவே ஆட்டம் ஆரம்பித்த நிலையில் தற்போது களத்தில் ஷட்மன் இஸ்லாம் ஆட்டமிழக்காமல் 50, ஷடாட் ஹொஸைன் ஆட்டமிழக்காமல் 12 ஓட்டங்களுடனுள்ளனர். வீழ்த்தப்பட்ட 2 விக்கெட்டுகளையும் கேமார் றோச் வீழ்த்தினார்.




### முதலாவது டெஸ்டில்

# இலங்கையை வென்ற தென்னாபிரிக்கா

இலங்கைக்கெதிரான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில், டேர்பனில் புதன்கிழமை (27) ஆரம்பித்து சனிக்கிழமை (30) முடிவுக்கு வந்த முதலாவது போட்டியில் தென்னாபிரிக்கா வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இலங்கை

தென்னாபிரிக்கா: 191/10 (துடுப்பாட்டம்: தெம்பா பவுமா 70, கேஷவ் மஹராஜ் 24 ஓட்டங்கள். பந்துவீச்சு: அசித பெர்ணாண்டோ 3/44, லஹிரு குமார 3/70, பிரபாத் ஜெயசூரிய 2/24, விஷ்வ பெர்ணாண்டோ 2/35)

இலங்கை: 42/10 (பந்துவீச்சு: மார்கோ ஜன்சன் 7/13, ஜெரால்ட் கொயட்ஸி 2/18, ககிஸோ றபாடா 1/10)

தென்னாபிரிக்கா: 366/5 (துடுப்பாட்டம்: ட்ரிஸ்டன் ஸ்டப்ஸ் 122, தெம்பா பவுமா 113, ஏய்டன் மார்க்ரம் 47 ஓட்டங்கள். பந்துவீச்சு: விஷ்வ பெர்ணாண்டோ 2/64, பிரபாத் ஜெயசூரிய 2/132, அசித பெர்ணாண்டோ 1/54)

இலங்கை: 282/10 (துடுப்பாட்டம்: தினேஷ் சந்திமால் 83, தனஞ்சய டி சில்வா 59, குசல் மெண்டிஸ் 48 ஓட்டங்கள். பந்துவீச்சு: மார்கோ ஜன்சன் 4/73, ககிஸோ றபாடா 2/65, ஜெரால்ட் கொயட்ஸி 2/67, கேஷவ் மஹராஜ் 2/67)

போட்டியின் நாயகன்: மார்கோ ஜன்சன்

### ஸ்பானிய லா லிகாத் தொடர்:

# லாஸ் பல்மாஸிடம் தோற்ற பார்சிலோனா




ஸ்பானிய கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான லா லிகாத் தொடரில், தமது மைதானத்தில் சனிக்கிழமை (30) நடைபெற்ற லாஸ் பல்மாஸுடனான போட்டியில் 1-2 என்ற கோல் கணக்கில் பார்சிலோனா தோற்றது.

பார்சிலோனா சார்பாகப் பெறப்பட்ட கோலை றபீனியா பெற்றதோடு, லாஸ் பல்மாஸ் சார்பாக சன்ட்ரோ றமிரெஸ், பேபியோ சில்வா ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை 02, டிசெம்பர் 2024, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு- 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.